ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**09.10.2023**

தலைப்புச்செய்திகள்

1.தெலுங்கானா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் சட்டிஸ்கட், மிஸோரம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் இன்று அறிவிக்கப்பட்டன.

2.பிரதமர் திரு.நரேந்திரமோதி தான்சானியா அதிபருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை புதுதில்லியில் இன்று மேற்கொண்டார்.

3. அரியலூர் மாவட்டம் வெற்றியூரில் நாட்டுவெடி தொழிற்சாலையில் இன்றுகாலை நேரிட்ட திடீர் தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

4.உச்சநீதிமன்ற உத்தரவின்படி தமிழ்நாட்டிற்கு கர்நாடகம் உரிய தண்ணீரை விடுவிக்க மத்திய அரசை வலியுறுத்தும் தனி தீர்மானத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் இன்று முன்மொழிந்தார்.

5. திருச்சி கரூர் திண்டுக்கல் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

************

தேர்தல்

தெலுங்கானா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் சட்டிஸ்கட், மிஸோரம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவை தேர்தல்களுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மிஸோரம் மாநிலத்தில் 40 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7 ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு.ராஜீவ்குமார் இன்று புதுதில்லியில் அறிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தின் 230 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 14 ஆம் தேதியும்,

ராஜஸ்தானில் 200 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 23 ஆம் தேதியும்,

தெலுங்கானாவில் 119 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 30ஆம் தேதியும், ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படும் என்றும் கூறினார்.

90 தொகுதிகளை கொண்ட சட்டிஸ்கட் மாநிலத்தில் 20 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7 ஆம் தேதியும்,

எஞ்சிய 70 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 17 ஆம் தேதியும் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்த 5 மாநில தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் டிசம்பர் 3 ஆம் தேதி எண்ணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

***********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோதி தான்சானியா அதிபர் சமியா சுலுஹு ஹசனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை புதுதில்லியில் இன்று மேற்கொண்டார்.

இருநாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

பிரதிநிதி நிலையிலான பேச்சுவார்த்தைகளில், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, வளர்ச்சியில் ஒத்துழைப்பு, உயர்கல்வி மக்கள் சார்ந்த நட்புறவுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

முன்னதாக தான்சானியா அதிபர் டெல்லி ராஜ்கட்டில் மகாத்மா காந்தியடிகள் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு குடியரசுத்தலைவர் மாளிகையில் அவருக்கு பாரம்பரிய சிவப்பு கம்பள வரவேற்பை அளித்து கவுரவித்தார்.

8 ஆண்டுகளுக்கு பின்னர் தான்சானியா அதிபர் இந்தியாவிற்கு முதல் முறையாக வந்திருப்பதால் இவ்வருகை இருநாடுகளுக்கிடையிலான நட்புறவை மேலும் ஆழப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

***********

ராஜ்நாத்சிங்

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் நான்கு நாள் அரசு முறை பயணமாக இத்தாலி, ஃபிரான்ஸ் நாடுகளுக்கு இன்று செல்கிறார்.

முதற்கட்டமாக இத்தாலி தலைநகர் ரோமில் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் **Guido Crisetto**-வுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொள்கிறார்.

இரண்டாவது கட்டமாக ஃபிரான்ஸ் செல்லும் திரு.ராஜ்நாத்சிங், இரு நாடுகளுக்கிடையிலான 5ஆவது வருடாந்திர பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளை அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் செபஸ்டியன் லெக்கார்னுவுடன் மேற்கொள்கிறார்.

இப்பயணத்தின்போது ரோம் மற்றும் பாரீசில் தளவாட தொழில் நிறுவன தலைமை செயல் அதிகாரிகளுடன் பாதுகாப்பு மேம்பாட்டு திட்டங்கள் குறித்து அமைச்சர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

************

அரியலூர் வெடி விபத்து

அரியலூர் மாவட்டம் திருமானூர் அருகே வெற்றியூர் பகுதியில் நாட்டு வெடி தொழிற்சாலையில் இன்றுகாலை நேரிட்ட திடீர் தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் 9 பேர் அரியலூர், தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆனி மேரி ஸ்வர்ணாவும்,

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஃபெரோஸ்கான் அப்துல்லாவும் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

************

அஞ்சல் தினம்

உலக அஞ்சல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக தேசிய அஞ்சல் வாரம் வரும் 13ஆம் தேதிவரை கடைபிடிக்கப்பட உள்ள நிலையில் திருச்சி மத்திய மண்டலத்தின் செயல்பாடுகள் குறித்து இதன் தலைவர் டி.நிர்மலா தேவி எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்:

வாய்ஸ்

************

சட்டப்பேரவை காவிரி முதலமைச்சர்

தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு அடித்தளமாக விளங்கும் காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட உச்சநீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பில்

வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாட்டிற்கு தண்ணீரை திறந்துவிடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட மத்திய அரசை வலியுறுத்தும் தனி தீர்மானத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தமிழக சட்டப்பேரவையில் இன்று முன்மொழிந்தார்.

இந்த தீர்மானத்தை ஒருமனதாக ஏற்று நிறைவேற்றித்தருமாறு உறுப்பினர்களை வேண்டிக்கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

வாய்ஸ்

இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் எந்த சூழலிலும் தமிழகத்தின் உரிமை விட்டுக்கொடுக்கப்படமாட்டாது என்று உறுதி அளித்தார்.

பின்னர் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது.

அனைத்து கட்சி உறுப்பினர்களும் இதில் பங்கேற்று பேசினார்கள்.

***********

கேள்விநேரம் நேரு

தமிழ்நாட்டில் 21 ஆயிரத்து 729 கோடி ரூபாய் செலவில் புதிதாக 123 இடங்களில் கூட்டுக்குடிநீர் திட்டங்கள் நிறைவேற்ற முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர் கடந்த 2 ஆண்டுகளில் மாநிலத்தில் 43 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக கூறினார்.

சென்னை செம்பரம்பாக்கம் ஏரியில் தற்போது நாளொன்றுக்கு 248 மில்லியன் லிட்டர் நீர் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாகவும், இதனை 540 மில்லியன் லிட்டராக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

அணைக்கட்டு பகுதியில் பூங்கா பராமரிப்பு திட்டம் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

***********

துரைமுருகன்

அத்திக்கடவு அவிநாசி குடிநீர் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணை பாதுகாப்பு திட்டம் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்றார்.

************

பொன்முடி

கல்லூரிகளில் காலியாக உள்ள கவுரவ பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்ப் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

பேரவையில் கேள்விநேரத்தின்போது இதை தெரிவித்த அவர் தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளில் 31 கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கல்லூரிகளில் மாணாக்கர் சேர்க்கை அதிகரித்துள்ளதாகவும், மாநில அரசின் புதுமைபெண் நான் முதல்வன் ஆகிய திட்டங்களே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டார்.

************

துணை மானியக்கோரிக்கை

சட்டப்பேரவையில் 2023-24 ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளை மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு இன்று தாக்கல் செய்தார்.

2 ஆயிரத்து 893 கோடியே, 15 லட்ச ரூபாய்க்கான நிதி ஒதுக்கீட்டிற்கு இதில் வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை பெருநகரம், கடலூர் மாநகராட்சிகளுக்கு மழை நீர் வடிகால் அமைக்க 304 கோடி ரூபாயும்,

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு பங்கு மூலதனமாக 175 கோடி ரூபாயும்,

தென்காசி சிவகங்கை ராமநாதபுரம், புதுக்கோட்டை, உள்ளிட்ட மாவட்டங்களில் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம் வழங்க 181 கோடி ரூபாயும்,

போக்குவரத்து நிறுவனங்களின் ஊழியர்களுக்கு நிலுவை முன்பணம் வழங்க 171 கோடி ரூபாய் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

************

சட்டப்பேரவை இரங்கல்

தமிழக சட்டப்பேரவையில் இன்று மறைந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் திரு.உம்மன்சாண்டி,

பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் பிரகாஷ்சிங் பாதல்,

முன்னாள் தலைமை செயலர் பா.சபாநாயகம்,

ஆகியோர் மறைவிற்கும் இன்று இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மறைந்த முன்னாள் பேரவை உறுப்பினர்கள் லியாவுதீன் சேட், பழனியம்மாள், ஆண்டமுத்து ஆகியோர் மறைவிற்கு பேரவையில் இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது.

************

பெரியசாமி

தமிழ்நாட்டில் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் பணிபுரிந்தவர்களுக்கு 8 வார காலமாக ஊதியம் வழங்கப்படவில்லை என்று நாளிதழ்களில் வெளியான செய்தி தவறானது என்று மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த திட்டத்திற்கு தமிழகத்திற்கு 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டிய நிலையில், சென்ற வாரம் ஆயிரத்து 800 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்ததாக குறிப்பிட்டார்.

ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து சம்மந்தப்பட்டவர்களின் வங்கி கணக்குகளுக்கு ஊதியம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும்,

எஞ்சிய 300 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவிக்கும் போது பயனாளிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலேயே தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம் தமிழகத்தில் தான் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

************

ராமதாஸ்

தமிழ்நாட்டில் வண்ணியர்களுக்கான 10.5 சதவிகித இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலினை இன்று நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த கோரிக்கை குறித்து ஆலோசனை மேற்கொண்டு முடிவெடுக்கப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்ததாக அவர் கூறினார்.

***********

ஆர்பாட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட தொடக்க மற்றும் கூட்டுறவு வேளாண் கடன் சங்கங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் 8 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி உயர்வு அளிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 3 ஆம் தேதியிலிருந்து பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

***********

இருவரி

திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தீயணைப்பு, பேரிடர் மீட்பு பணிகள் துறை சார்பிலான ஒத்திகை பயிற்சியையும், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனகோட்டத்தில் உள்ள கிராமபகுதியில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதால் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் எனவும், வனபகுதிக்குள் செல்ல வேண்டாம் எனவும் வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிறுத்தை நடமாட்டம் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் பிடிக்கப்படும் என்றும் ஒலிபெருக்கி மூலம் வனத்துறையினர் அறிவித்து வருகின்றனர்.

***********

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, ஈரோடு, கோவை கிருஷ்ணகிரி தர்மபுரி, திருப்பத்தூர், திருச்சி கரூர் திண்டுக்கல் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோரம், மன்னார்வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூராவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

கிரிக்கெட்

ஹைதராபாத்தில் நடைபெறும் ஐ.சி.சி. உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்திற்கு எதிராக டாஸ் வென்ற நெதர்லாந்து முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

************